**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன்**

**வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 28.08.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 83/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-5 |
| **சாட்சியின் பெயர்** | : | பாரதிராஜா |
| **தந்தை பெயர்** | : | அல்லிமுத்து |
| **கிராமம்** | : | சிதம்பரகோட்டகம் |
| **தாலுக்கா** | : | திருத்துறைப்பூண்டி |
| **தொழில்** | : | ஓட்டுனர் |
| **வயது** | : | 32 |

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5 எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியல் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனர் வேலை செய்து வருகிறேன். நான் இந்து பள்ளர் வகுப்பை சேர்ந்தவன். அ.சா-1 மாதரசனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் அம்பளக்காரர் சாதியை சேர்ந்தவர்கள். பார்வை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவைகளில் உள்ள கையொப்பங்கள் எதுவும் என்னுடைய கையொப்பங்கள் அல்ல. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த

சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 29.10.2010 ஆம் தேதி சுமார் 3.00 மணி அளவில் அ.சா-1க்கும் எதிரிகளுக்கும் நடந்த பிரச்சனை சம்மந்தமாக திருத்துறைப்பூண்டி துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் சிதம்பரகோட்டகம் வந்து சுமார் 10.30 மணி அளவில் சம்பவ இடத்தில் பார்வை இட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் அதில் நானும் அகரவயலை சேர்ந்த வைத்தியலிங்கம் மகன் பக்கிரிசாமியும் சாட்சியா கையொப்பம் இட்டோம் என்றும், 11.00 மணி அளவில் சம்பவ இடத்தில் இருந்து உடைந்த நிலையில் பச்சை கலர் பீர் பாட்டில் துண்டு மூன்றை கைப்பற்றியதாகவும், அதில் நானும் பக்கிரிசாமியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சார்ந்தவர்கள் என்பதால் எதிரிகளை காப்பாற்றும் நோக்கோடு உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:** இல்லை

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.08.28 14:31:58 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.